Registered as a News paper in Ceylon விலை சதம் 10

எப்பொழுதும் பாவியுங்கள்
ராஜ பீடி
ஸ்பெஷல்

ராஜ பீடி கம்பெனி, கொழும்பு-14



# ஈழநாடு
THE EELA NADU

தேசிய தினசரி — National Tamil Daily
மலர் 9 — [15-9-67] — இதழ் 216
யாழ்ப்பாணம் பிலவங்க ஆவ. 30 ஐ. ஆதீர். 10 வெள்ளிக்கிழமை

எப்பொழுதும் பாவியுங்கள்
ராஜ பீடி ஸ்பெஷல்

ராஜ பீடி கம்பெனி; கொழும்பு-14


# கல்முனையில் மாணிக்கம், மசூர் மௌலானா போட்டி

## அகமத் சுதந்திரக்கட்சி அபேட்சகராக நிற்பார்

கொழும்பு. வியா. கல்முனைத் தொகுதிக்கு ஈழத்தமிழர் இன விடுதலை இயக்கத்தின் சார்பில் முன்னாள் செனட்டர் எம். மாணிக்கம் போட்டியிடுவாரென அறிவிக்கப்பட்டுள்ளது. திரு. மாணிக்கம் இலங்கை-இந்திய ஒப்பந்த அமுல் மசோதா சம்பந்தமாக ஏற்பட்ட கருத்துவேற்றுமை காரணமாக செனட்டர்பதவியிலிருந்து அண்மையில் ராஜினாமாச்செய்திருந்தார். தமிழரசுக்கட்சியிலிருந்தும் அவர் வெளியேறினார்.

கல்முனைத் தொகுதிக்கு நான்கு அபேட்சகர்கள் போட்டியிடுவார்களெனத் தெரியவருகிறது. தமிழரசுக் கட்சிசார்பில் செனட்டர் மசூர் மவுலானா போட்டியிடுவார். இவரின் செனட்டனர் பதவிக்காலம் அடுத்த மாதத்துடன் முடிவடைகின்றது. கடந்த பாராளுமன்ற தேர்தலின்போது திரு மவுலானா கேட் முதலியார் காரியப்பரினால் தோற்கடிக்கப்பட்டார்.

சுதந்திரக்கட்சி சார்பில் திரு. எம். சி. அஹமட் இஸ்லாமிய சோஸலிஸ முன்னணியின் ஆதரவுடன் இத்தொகுதிக்கு போட்டியிடுகின்றார். கேட் முதலியார் காரியப்பரின் மகன் திரு. ஷெறிவ்வும் இத்தொகுதியில் போட்டியிட முன் வந்துள்ளார்.

## வடக்கில் ல. ச. ச. கட்சி புதிய உற்சாகத்துடன் இயங்கும்

### புளத்சிங்கள எம். பி. மங்களமுனசிங்கா நடவடிக்கை

யாழ்ப்பாணம், வியாழன் லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர்களில்ஒருவரும், புளத்சிங்கள எம். பி. யுமான திரு. மங்கள முனசிங்கா யாழ்ப்பாணத்திலுள்ள இடதுசாரிக் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள், ஆதரவாளர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தினார்.

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளுக்கும் அவர் விஜயம் செய்து வடபகுதியில் தமது கட்சிக்குள்ள ஆதரவு குறித்து ஆராய்ந்தார்.

வடபகுதியிலுள்ள தமிழ்க் கட்சிக் கிளைகளையும், வாலிப முன்னணிக் கிளைகளையும் மீண்டும் புதிய உற்சாகத்துடன் இயங்கச்செய்வதற்கான நடவடிக்கைகளிலும் திரு. மங்கள முனசிங்கா ஈடுபட்டுள்ளார்.

நேற்று சுழிபுரம் பகுதிக்கு திரு. மங்கள முனசிங்கா விஜயம் செய்து தமது கட்சியின் வாலிப முன்னணிக் கிளையினரை புதிய உற்சாகத்துடன் இயங்கச் செய்வதற்காக அங்கத்தவர்களுடன் நீண்ட நேரம்செலவு செய்தார். பல பிரச்னைகள் குறித்து அவர் விளக்கமும் கொடுத்தார்.

(நி)

யாழ்ப்பாணத்தில்

## கடைத்திருட்டுகளை ஒழிக்க பொலிஸாரின் புதிய திட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ். நகரில் அதிகரித்து வரும் கடைத்திருட்டுகளை முற்றாக ஒழிக்க 'பட்டின இரவுக் காவலாளர்களை' அமைக்கும்திட்டமொன்றை வடபகுதிப் பொலிஸார் வகுத்துள்ளனர். இத்திட்டம் அதிகமாக அடுத்த மாதத்திலிருந்து நடைமுறைக்கு வருமென எதிர்பார்க்கப்படுகின்றது.

நகரிலுள்ள சகல கடைச் சொந்தக்காரர்களினதும் ஒத்துழைப்புடனேயே இத்திட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும். இதற்காக கடைச்சொந்தக்காரர்களுடனான ஆலோசனைக் கூட்டமொன்றை இந்த வாரத்தில் வடபகுதி பொலிஸ் சுப்பிரின்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம்

[6-ம் பக்கம் பார்க்க]

## 'சிங்கள எஜமானர்க்கு அடிமைப் பட்டிருக்கிறது'

### தமிழர் நிலைபற்றி பிரதமருக்கு சுந்தரலிங்கம் கடிதம்

யாழ்ப்பாணம், வெள்ளி அடுத்த ஆண்டு பெப்ரவரி 4-ம் தேதி சுதந்திரதின விழாவை கிழக்கு மாகாணத்தில் அரசாங்கம் கொண்டாடும்போது, தமிழ் மக்கள் அதில் பங்கெடுக்காது துக்கதினமாக அனுஷ்டிக்கவேண்டுமென்று கோரும் தீர்மானமொன்றை முன்னாள் வவனியா எம். பி. திரு. ஸி. சுந்தரலிங்கம் தலைமையிலான ஈழத் தமிழ் இன விடுதலை இயக்கம் நிறைவேற்றியுள்ளது. இந்தத் தீர்மானம் பிரதம மந்திரிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

பிரதமருக்கு அனுப்பப்பட்டுள்ள இத்தீர்மானத்துடன் ஒரு குறிப்பொன்றையும் திரு. ஸி. சுந்தரலிங்கம் இணைத்து அனுப்பியுள்ளார்.

1956-ம் ஆண்டில் உமது முன்னோடியான சேர்.

(6-ம் பக்கம் பார்க்க)

உருத்திரபுரம்

## இரட்டைக்கொலை வழக்கில் எதிரிகள் இருவரும் விடுதலை

யாழ்ப்பாணம், வெள்ளி உருத்திரபுரம் இரட்டைக் கொலை வழக்கில் எதிரிகள் இருவரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். விசாரணை இடைநடுவில் ஜூரி சபையினர் ஏகமனதாக சாட்சியங்கள் திருப்தியளிக்கவில்லையென்றும் விசாரணையை தொடர்ந்து நடத்த விரும்பவில்லையென்றும் தெரிவித்ததைத் தொடர்ந்து நீதியரசர் எதிரிகளைவிடுதலைசெய்து தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வி. மாணிக்கவாசகர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. இன்ஸ்பெக்டர் பொன்னம்பலம் நேற்று சாட்சியமளித்தார்.

இவ்வழக்கில் உருத்திரபுரத்தில் 66-ம் ஆண்டு அக்டோபர் 13-ம் தேதி கந்தையா இரத்தினம், சின்னவன் பொன்னையா ஆகியோர் தனுஷ்கோடி சண்முகம், சண்முகம் நடராசா ஆகியோரைச் சுட்டுக்கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

விசாரணையை பார்ப்பதற்கு பாடசாலை மாணவிகள் உட்பட கோர்டின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

1-ம் எதிரி சார்பில் அட்வக்கேட் கே. வி. எஸ். சண்முகநாதன், புறக்டர் எஸ். அமிர்தலிங்கத்தின் அனுசரணையுடன் ஆஜரானார், 2-ம் எதிரி சார்பில் அட்வக்கேட் எம். எஸ். சுந்தரலிங்கம், புறக்டர் ஏ. ரி. ஜி. பிரிட்டோவின் அனுசரணையுடன் ஆஜரானார், எதிரிகளுக்காக அரசாங்கத்தால் புறக்டர் வி பரமானந்தம் [illegible] கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் அட்வக்கேட் அலோய் இரத்நாயக்கா ஆஜரானார்.

தீர்ப்பளிக்கும்போது நீதியரசர் கூறியதாவது: ஜூரி சபையினர் விசாரணையை இதற்குமேல்நடத்த தேவையில்லையென தீர்மானித்துள்ளனர். எங்கள் நீதிமுறைப்படி எதிரிகளுக்கு மாறாக உள்ள குற்றச்சாட்டை ஐமிச்சத்திற்குமாறாக ஒப்பேற்றப்படவேண்டும். அமரசிங்கத்தின் சாட்சியத்தில் ஜூரி சபையினர் சரியான முடிவிற்கு வந்துள்ளனர். ஜூரி சபையினர் அமரசிங்கத்தின் சாட்சியத்தை ஏற்றிருந்தாலும், 2-ம் எதிரிக்கு எதிராக வழக்கை ஒப்பேற்ற முடியாது. அமரசிங்கத்தின் சாட்சியத்தின்படி 1-ம் எதிரியைத்தான் ஒப்பேற்றமுடியும்.

வடபகுதிஅசைஸ் விசாரணை

## 'இறந்தவர் உடலில் 19 காயங்கள் இருந்தன'

### தெல்லிப்பளை கொலைவழக்கில் டாக்டர் சண்முகநாதன் சாட்சியம்

யாழ்ப்பாணம், வெள்ளி காலஞ்சென்ற முதலி சின்னவனை நான் பிரேத பரிசோதனைசெய்தபோது அவரது உடலில் 14 வெளிக்காயங்களும் 5 உள்காயங்களும் இருந்தன. முதல் ஆறு காயங்களும் பொல்லினால் ஏற்பட்ட காயங்கள்.

தெல்லிப்பளை கொலை வழக்கில் சாட்சிமளித்த மாவட்டவைத்திய உதவியாளர் டாக்டர்வீரவாகுசண்முகநாதன் மேற்கண்டவாறு கூறினார் இவ்வழக்குநேற்றுக் காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வி. மாணிக்கவாசகர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் தெல்லிப்பளையில் 66-ம் ஆண்டு ஏப்ரல் 7-ம் திகதி முதலி சின்னவனை, ஆண்டி முதலி, நீலன

[6-ம் பக்கம் பார்க்க]

### மீண்டும் வேலை கிடைத்தது

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தைச் சேர்ந்த திரு. செல்வரத்தினத்துக்கு மீண்டும்வேலை வழங்கப்பட்டுள்ளது.

உணவுக் கட்டுப்பாட்டு இலாகாவில் கடமையாற்றிய திரு. செல்வரத்தினம் அங்கு மாட்டப்பட்டிருந்த பிரதமர் திரு. டட்லிசேன நாயகாவின் புகைப்படத்தை உடைத்ததென்ற சந்தேகத்தின்பேரில் அரசாங்க அதிபரினால் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்தார். விசாரணை முடிவில் இவருக்கு மீண்டும் காணி இலாகாவில் வேலை வழங்கப்பட்டுள்ளது. ந.நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

எப்பொழுதும் அகமலர்ச்சியும், முகமலர்ச்சியும் உடையவனாக இரு. நிகழவேண்டுவன தம் இயல்பால் நிகழும். உனக்கும் உலகுக்கும் என்ன தொடர்பு இருக்றது. உன்னோடு தொடர்பு அற்றவைகளுடன் வீணாக தொடர்புளை ஏற்படுத்தாமல், உன்னோடு தொடர்புடைய இறைவனோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்.

— ஸ்ரீ ராமகிருஷ்ணர்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க ஆவணி மீ 30 உ 15-9-67)

## ஐ. நா. வின் எதிர்காலம்

ஐ. நா. மகாசபையின் புதிய கூட்டத் தொடர் அடுத்த வியாழக்கிழமை தொடங்குகிறது. மேற்கு ஆசியப் பிரச்னையே இக் கூட்டத் தொடரில் முக்கிய இடத்தைப் பெறும் என்று கருதப்படுகிறது. மேற்கு ஆசிய யுத்தத்தைத்தொடர்ந்து ஐ. நா. மகாசபையின் அவசரக் கூட்டத்தில் மேற்கு ஆசியப்பிரச்னை விவாதிக்கப்பட்டது. எனினும் நடைமுறைச் சாத்தியமான எந்த முடிவும் ஏற்படவில்லை. மேற்கு ஆசிய நிலை இன்னும் நீறுபூத்த நெருப்பைப் போலவே இருக்கிறது.

ஐ. நா. மகாசபை ஒரு விவாதமேடையாக, கருத்தரங்கமாக இருக்கிறதென்றும் எந்தத் தீர்மானத்தையும் செயலில் நிறைவேற்றக்கூடிய, எவருக்கும் கட்டளையிடும் அதிகாரம் ஐ. நா. வுக்கு இல்லாதிருக்கிறதென்றும் இலங்கைக்கு விஜயம் செய்த இந்தியாவின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் திரு. வி. கே. கிருஷ்ணமேனன் தெரிவித்தார். திரு. மேனன் சர்வதேச அரசியல் பிரச்னைகளில் ஊறித் திளைத்தவர். ஐ. நா. வில் இந்தியாவின் பிரதிநிதியாக பல வருடங்கள், பல தடவைகளில் கலந்துகொண்டவர். ஐ. நா. வின் நடைமுறைகளை நன்கு அறிந்தவர். ஐ. நா. ஒருசர்வதேச விவாத அரங்காக விளங்குகிறது என்று அவரே கூறுகிறார். எனினும் ஐ. நா. வினால் நன்மையில்லையென்றும் அவர் சொல்லவில்லை. இன்று உலகம் இந்த அளவிலாவது, மற்றொரு உலகயுத்தம் ஏற்பட்டு பேரழிவு நேராமல் இருப்பதற்கு ஐ. நா. தான் காரணமென்பதையும் அவர் மறுக்கவில்லை.

ஐ. நா. மகாசபையின் புதிய கூட்டத் தொடரில் மேற்கு ஆசிய பிரச்னையே முக்கியமாக விவாதிக்கப்படவிருக்கிறது. இனியும் இப்பிரச்னையில் ஓர் உறுதியான, தீர்க்கமான முடிவுக்கு ஐ. நா. வழி காண வேண்டும். வியட்நாம் பிரச்னைபோல் மேற்கு ஆசியப் பிரச்னையும் தீராத பிரச்னையாக இருக்குமானால் உலக அமைதிக்கு மட்டுமல்ல ஐ. நா. வின் எதிர்காலமே கேள்விக்குரியதாகிவிடலாம். உலக சமாதானமே தங்கள் நோக்கமென்றுகூறிக் கொள்ளும் வல்லரசுகள் முதல் சிறிய நாடுகள் வரை இதுபற்றிச் சிந்திக்க வேண்டிய சமயம் வந்து விட்டது.

# 'அழியாப் பேரின்பம் தரும் தேவார திருவாசகம் ஒலிக்கட்டும்'

— தம்பிரான் சுவாமிகள்

சாவகச்சேரி, வியா.

''மெல்லிசை தலைதூக்கி வரும் இக்காலத்தில் மன்னர் ஆட்சியில் மணிமுடியில் வைத்துக் காப்பாற்றப்பட்ட தமிழ் இசையினை வளர்த்தல் வேண்டும். இன்று மெல்லிசையே எங்கும் ஒலிக்கிறது. அதை ஒழித்து உண்மையான இசையினை வளர்க்க ஒவ்வொருவரும் முன்வர வேண்டும்'' என மீசாலை தமிழிசைச் சங்கத்தின் ஏழாவது ஆண்டு இசை விழா மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய முன்றிலில் ஆரம்பமான போது விழாவை ஆரம்பித்துவைத்துப் பேசிய ஸ்ரீமத் சுவாமி நாதத்தம்பிரான் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், இன்று நாட்டின் எப்பாகங்களிலும் ஆபாசத்தைத்தூண்டக்கூடிய சினிமாப் பாடல்களே ஒலிக்கின்றன. இதைவிடுத்து பக்தியைப்பெருக்கி இம்மைக்கும் மறுமைக்கும் அழியாப் பேரின்பத்தைத் தரவல்ல தேவாரம், திருவாசகம், திருப்பல்லாண்டு, திருப்புராணம், திருப்புகழ் எங்கும் ஒலிக்கவேண்டும். இதனால் இசையும் வளரும்'' என்றார்.

பல சங்கீதபூஷணங்களின் சங்கீதக் கச்சேரியும் இடம் பெற்றன.

## 5 மணி நேரம்மட்டும் ஒலிபெருக்கி பாவிக்கலாம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வீடுகளில் நடைபெறும் திருமணவைபவங்கள் போன்ற மங்கள காரியங்களுக்கு ஒலிபெருக்கியை 5 மணித்தியாலங்கள் மட்டுமே பாவிக்க பொலிசார் இனி அனுமதி வழங்கவிருக்கிறார்கள். இம்முறை அக்டோபர் 1-ம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்.

இரவு நேரங்களிலும், மற்றும் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக் கூடியதாகவும் ஒலிபெருக்கிகள் பல இடங்களிலும் பாவிக்கப்படுவதாக பொலிசாருக்குப் புகார் செய்ததைத்தொடர்ந்தே பொலிசார் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். குறிப்பிட்டநேரத்துக்கு அதிகமாக எங்காவது ஒலிபெருக்கி பாவிக்கப்பட்டால் ஒலிபெருக்கியையும், அதன் உபகரணங்களையும் பொலிசார்பறிமுதல் செய்வார்களென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ந.நி.]

## இன்றைய பலன்

15-9-67

வெள்ளிக்கிழமை
(ஆவணி மாதம் 30உ)

நட்சத்திரம்- திருவோணம் இரவு 10-27வரை. மேல் அவிட்டம்.

திதி- துவாதசி இரவு 8-32வரை மேல் திரயோதசி.

சுபநேரம்-6-03—7-33

ராகுகாலம்- 10-33—12-03.

மேஷம்- விரும்பியதுநடக்கும், வெற்றிமுரசு கொட்டு.

ரிஷிபம்- பாக்கிய விருத்தி, பரம்பொருள்சிந்தை

மிதுனம்- கேலிக்கணை, கேடுவரும் பின்னே.

கடகம்- தொழில்வளம் பெறும், எழில் சேர்க்கும் வாழ்வு.

சிங்கம்- நிர்ப்பந்த நிலைமை, நிதானம்வேண்டும்.

கன்னி- பிதாவழிநலன், பெரியோர் ஆசி.

துலாம்- இல்லத்தில் நிலைமாற்றம், இதயத்தில் தடுமாற்றம்.

விருச்சிகம்- கனிவான நினைவு, காதல்தொடர்பு.

தனுசு- சிறுபீதி, சிந்தனைச்சுழல்.

மகரம்- பொறுமைப் பார்வை, நிதானம்வேண்டும்.

கும்பம்-வாக்குச் சிறப்பு வரவும் உயரும்.

மீனம்- ஆசாரக்குறைவு ஆசையின் தோல்வி.

—சோதிடக் கலாநிதி—
திருமலை வேலுப்பிள்ளை

## இருளில் இந்த சந்தி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி தாதிமார் பயிற்சிக் கல்லூரிக் கண்மையில் அமைந்துள்ள சந்தி கடந்த பத்துத்தினங்களாக இருளில் ஆழ்ந்துள்ளது.

குறிப்பிட்ட சந்தியில் பொருத்தப்பட்ட மின்சார வெளிச்சம் பழுதடைந்துள்ளமையே இதற்குக் காரணமாகும். போக்குவரத்து நெருக்கடி அதிகமுள்ள இச்சந்தியில் விரைவில் மின்சார வெளிச்சம் பழுது பார்க்கப்படாவிடின் விபத்துக்கள் கூட ஏற்பட நேரிடும். [நி]

## துணுக்காய்ப் பகுதியில் கடும் வரட்சி

மல்லாவி, வியாழன்

நீண்டகாலமாக மழையின்மையினால் இப்பகுதியில் கொடிய வரட்சி ஏற்பட்டுள்ளது. இங்குள்ள மக்கள் குடி தண்ணீரின்றிக் கஷ்டப்பட்டு வருகின்றனர். கால் நடைகளும் குடிதண்ணீரின்றி இறந்தழிகின்றன. இப்பகுதியில் உள்ள சிறு குளங்கள், கிணறுகள் யாவும் வற்றி விட்டன. பாடசாலைகளும் தண்ணீர்க் கஷ்டத்தால் காலை நேரங்களில் மாத்திரம்நடைபெறுகின்றன.

## ''ஒழுக்கமும் பகதியும் பெண்கட்கு வேண்டும்''

பண்டத்தரிப்பு, வியா.

'தமிழ்ப்பெண்கள் தமது பண்பாட்டுடனும், கடவுள் பக்தியுடனும் ஒழுக்கத்துடனும் வாழவேண்டும்' என இளவாலை சென். ஜேம்ஸ் நெசவு நிலைய கலை, கதம்ப விழாவுக்குத் தலைமைவகித்த மாவட்ட குடிசைக் கைத்தொழிலதிபர் திரு. எஸ். கந்தவனத்தின் பாரியார் குறிப்பிட்டார். கைத்தொழிலதிபர் திரு. கந்தவனம் பொருட்காட்சியைத்திறந்து வைத்தார். அவர் தமது பேச்சில் நெசவு நிலையப் பொறுப்பாளரான செல்வி மகேஸ்வரி வேலுப்பிள்ளையைப்பாராட்டினார்.

செல்விகள் க. இராசேஸ்வரி. சூ. கத்தரீன் ஆகியோரும் பேசினர்.

## பரிசு பெற்றவர்

வெள்ளவத்தை, வியா.

தமிழ் இலக்கிய மன்றம் நடாத்திய கட்டுரை, பேச்சு, கவிதைப் போட்டிகளில் முதற்பரிசு பெற்றவர்களுக்குத் தங்கப்பதக்கமும் இரண்டாம் பரிசு பெற்றவர்களுக்கு வெள்ளிப்பதக்கமும் பரிசளிக்கப்பட்டன. மகா கவி பாரதியாரின் பேர்த்தியார் திருமதி சு. விஜயபாரதி பரிசுகளை வழங்கினார். முடிவுகள் வருமாறு:

கட்டுரை:-முதலாவது திருதாயுமானவன் (நுவரெலியா) இரண்டாவது திரு. க. பேரம்பலம். (நெல்லியடி) பேச்சு:- திரு. ராஜ பாரதி, திரு. கே. மகாதேவன். கவிதை:-திரு. ராஜபாரதி.

கொழும்பு, வியா.

கொழும்பு கணபதி வித்தியாலயபரிசளிப்பு பெற்றோர் தினவிழா இன்றுநடைபெறவிருக்கிறது. உள்ளூராட்சி உதவி மந்திரி திரு. ஆர். பிரேமதாசா தலைமையில் நிகழும் இவ்விழாவில் திருமதி பிரேமதாசா பரிசில்களை வழங்குவார். உடுப்பிட்டித்தொகுதி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் பிரதம விருந்தினராகக் கலந்துகலந்து கொள்வார்

## சென்னையில் நடைபெறவிருக்கும் சர்வதேச பொருட்காட்சி

சென்னை, செப். 14

சென்னையில் அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில் நடைபெறவிருக்கும் சர்வதேச தொழில், பொருட்காட்சிக்கு மேலும்ஒருகோடி ரூபாய் கொடுத்துதவுமாறு தமிழக அரசாங்கம் மத்திய அரசாங்கத்தைக் கேட்டுள்ளதாகத் தமிழக தொழில் மந்திரி திரு. நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

திட்டக்கமிஷன் அங்கத்தவர் திரு, ஆர். வெங்கடராமனுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பொன்றில் கலந்துகொண்டு பேசுகையிலேயே திரு. நெடுஞ்செழியன் இவ்வாறு கூறினார். அடுத்தவருடம் சென்னையில் நடைபெறும் சர்வதேசப் பொருட்காட்சியை மிகச்சிறப்பாக நடாத்ததமிழக அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

பொருட்காட்சிக்கான சாலைகள் அமைப்பதிலும், மின்சார வசதிகள் செய்வதிலும் ஏற்கனவே ஒரு கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாகவும் திரு. நெடுஞ்செழியன் குறிப்பிட்டார்.

திரு. வெங்கடராமன் வரவேற்பிற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில், சென்னை சர்வதேசப் பொருட்காட்சியில் கலந்துகொள்ள இன்னும் முடிவுசெய்யாத நாடுகள், பொருட்காட்சியில் பெருமளவில் பங்குபற்றுமெனத் தாம் நம்புவதாகக் கூறினார்.

## நாட்டிலும் நகரிலும்

விதை நெல்லுக்காக கமக்காரர் அலைந்து திரியும் இச்சமயத்தில், இரு கமக்காரரிடையே இவர் கேட்க நேர்ந்த பின்வரும் சம்பாஷனை ருசியானது. இருவரும் வடமாகாணத்தில் வெவ்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

'விதை நெல்லு முப்பத்தைந்து ரூபாய்க்கும் கிடைக்குதில்லை.'

'என்ன! முப்பத்தைந்தா? எந்த ஊரிலே?'

'எந்த ஊரிலும்தான்.'

'இதென்ன விசர் கதை! 14, 15 க்கு எடுக்கலாமே!"

'பச்சைப்பெருமாள் 15 க்கு எடுத்துத் தந்தால் நான் உமக்கு நூறு ரூபாய் தருவேன்.'

'வாரும், எடுத்துத் தாறேன் எங்கள் ஊரில்.'

'உங்கள் ஊரில் அப்படியிருக்கலாம். எங்கள் ஊரில் 35 க்குக் குறைய எடுக்க இயலாது.'

'பச்சைப் பெருமாள் எங்கும் பச்சைப் பெருமாள் தான். உங்கள் ஊருக்கு ஒன்று எங்கள் ஊருக்கு ஒன்றல்ல.'

'பச்சைப்பெருமாளில் பல தினுசுகள் இருக்கலாம். எங்கள் ஊரில் பச்சைப் பெருமாளுக்கு 35 ரூபாதான்.'

'நீங்கள் அப்பவேறு நெல்லைப்பற்றிபேசுகிறீராக்கும்.'

'இல்லை. இல்லை. பச்சைப் பெருமாளைப்பற்றித்தான் பேசுகிறேன்.'

இப்படியே இவர்களுடைய வாக்குவாதம் ஒரு முடிவின்றி தொடர்ந்து கொண்டே போனது.

பச்சைப்பெருமாள் என்பது ஒருவித நெல் இனம். இன்னும் 'மொட்டைக் கறுப்பன்', 'வெள்ளை இளங்கலையன்'. 'எச். போர்' என்று பலவித நெல் இனங்கள் வட, கிழக்கு பகுதிகளில் உபயோகிக்கப்படுகின்றன.

ஓர் இன நெல் ஒரு வித நிலத்துக்கு உகந்ததாயிருக்கும். அதே நெல் இன்னொரு நிலத்துக்கு ஒவ்வாததாயிருக்கும். இவ்வுண்மையை அறியாமல்தான் மேற்சொன்ன இருவரும் சண்டை போட்டுக்கொண்டார்கள்.

இன்ன நிலத்துக்கு இன்ன இன நெல்தான் சிறந்ததென்பதை நமது விவசாயப் பகுதியினர் கமக்காரருக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும். விவசாயப் பகுதியினர் ஆராய்ச்சி நிலையங்களில் ஓர் இன நெல் நல்ல விளைச்சல் கொடுத்தால் அதுவே அப்பகுதி முழுவதுக்கும் சிறந்ததென்று சிபார்சு செய்வது நியாயமாகுமா?

இதுபோக, டைவான் தீவிலிருந்து ஐ. ஆர். 8 என்று ஒரு புதுவித நெல் விதையை முன்னாள் பிரதம நீதிபதி பஸ்நாயகா என்பவர் வரவழைத்து வேண்டியவர்களுக்கு விநியோகம் செய்துவருகிறார். இந்நெல் அமோகமான மகசூல் தரக்கூடியதாம்.

தென்னிந்தியாவில் ஒரு விவசாயி இந்த நெல்லை விதைத்துத் தான் தமிழகத்திலேயே ஆகக் கூடுதலான சாகுபடி செய்து அரசாங்க விருது பெற்றார். ஈழத்திலும் முன்னாள் மந்திரி ஒருவர் வடமாகாணத்தில் இந்த இன நெல்லையே விதைத்து நல்ல சாகுபடி பெற்றார் என்று நம்பவேண்டியிருக்கிறது.

விவசாயப் பகுதியினர் நிலத்துக்கேற்ற நெல் இனத்தைத் தேர்ந்தெடுத்து விவசாயிகளுக்கு சிபார்சு செய்ய வேண்டும். இல்லாவிட்டால் எந்த இன நேல் எந்த நிலத்துக்குச் சிறந்ததென்றுஅவர்கள் தங்களுக்குள்ளே சண்டை போட்டுக் கொண்டிருப்பார்கள். —வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிக்கிம் எல்லையில் சண்டை நின்றது

## இந்திய போர் ஓய்வு யோசனை பெரும்மோசடி என்கிறது பீகிங்

புதுடில்லி, செப். 14

சிக்கிம் — திபெத் எல்லையில் நாதுலா பகுதியில் சீனத்துருப்புகளுக்கும் இந்தியத்துருப்புகளுக்குமிடையே நேற்றிரவு 7-45 மணிக்குப் பின்னர் இதுவரை மோதல் எதுவும் ஏற்படவில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது. அப்பகுதியில புதிய நடவடிக்கைகள் எதுவும் அறிவிக்கப்படவில்லை.

நாதுலா அரங்கு தளபதிகளுக்கிடையே போர் ஓய்வு பற்றிய பேச்சுவார்த்தைகள் நடைபெறவேண்டுமென்ற இந்தியாவின் ஆலோசனைக்குச் சீன இன்னும் பதில் அனுப்பவில்லை.

இந்தியாவின் போர்நிறுத்த ஆலோசனையைப் பீகிங்கில், நவசீன செய்தித் தாபனம், ஒருபெரும் மோசடி' என வர்ணித்துள்ளது.

## 'சீனாவின் நோக்கம் தெளிவாக விளங்கவில்லை'

### அமெரிக்க பத்திரிகையாளருடன் திரு. தேசாய் பேட்டி

வாஷிங்டன், செப். 14

இந்தியாமீதான சீனத் தாக்குதல், வடவியட்னும் நெருக்கடியைத் தளர்த்துவதற்கென எடுக்கப்பட்ட ஒரு முயற்சியாக இருக்கலாம் என்ற அமெரிக்கப் பத்திரிகையாளரின் யோசனையை, இங்கு விஜயம் செய்துள்ள இந்தியத் துணைப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் ஒப்புக்கொண்டார்.

'ஆனல், சீனவின் நோக்கம் எதுவென்று தெளிவாகக்கூறமுடியாது' என்றும் திரு. தேசாய் குறிப்பிட்டார்.

**வியட்னும்போர்**

வியட்னும் போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவர, ஹனோயை இந்தியா ஒரு சமாதான மாநாட்டுக்குக் கொண்டுவர முடியாதா என்று ஒரு பத்திரிகையாளர் திரு. தேசாயைக்கேட்டார். அதற்கு அவர் பதிலளிக்கையில், வடவியட்னுமைச்சமாதான மாநாட்டுக்கு அழைத்துவருவது இந்தியாவுக்கு இயலாத காரியமென்றும், அப்படி ஒரு சமாதான மாநாட்டில் பங்குபற்றுமாறு அதைக் கேட்டுக்கொள்ள மாத்திரமே இந்தியாவுக்கு முடியுமெனவும்திரு. தேசாய் கூறினர்.

'வியட்னும் போரில் ஈடுபட்டுள்ள ஒரு பெரிய நாடென்றமுறையில், அமெரிக்காதான் சமாதானத்துக்கான முதல் நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்' என்ருர் திரு. தேசாய்.

## செக்கோஸ்லோவாக்கியஒற்றர் பிரான்சில் பிடிபட்டார்

### 7 வருடம் சிறைத்தண்டனை

பாரிஸ், செப். 14

பிரான்சில் ஒரு செக்கோஸ்லாவாக்கிய ஒற்றர் பிடிபட்டுள்ளார். கடந்த சில வாரங்களில் பிடிக்கப்பட்ட இரண்டாவது செக்கோஸ்லாவாக்கிய ஒற்றர் இவராவார்.

இவருக்கு, பிரெஞ்சு பாதுகாப்பு நீதிமன்றம், 7 வருடச்சிறைத்தண்டனை விதித்துள்ளது.

முதலில்பிடிபட்டவருக்கு, இந்நீதிமன்றம் அண்மையில் 10 வருடச் சிறைத்தண்டனை விதித்திருந்தது.

பம்பாய் வாழ்

## தென்னிந்திய மக்களுக்கு சிவசேனைத் தலைவர் உறுதி

பம்பாய், செப். 14

பம்பாயில் தென்னிந்தியர்கள் ஏராளமாக வசிக்கும் மாதுங்கா, சியான் செம்பூர் போன்ற பகுதிகளுக்கு விஜயம் செய்து, தென்னிந்திய நண்பர்களுடன் சேர்ந்து பொதுக்கூட்டங்களில் பேசி, சிவ சேனையின் லட்சியங்களையும் நோக்கங்களையும் மக்களுக்கு எடுத்து விளக்கத் தயாராயிருப்பதாக சிவசேனையைத் தோற்றுவித்த திரு. பால் தாக்கரே கூறியதாக, பம்பாய் பகுதி சுதந்திரா கட்சி பொதுக் காரியதரிசி திரு மது மேத்தா இங்கு விடுத்துள்ள ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சிவசேனை அங்கத்தினர்கள் வன்முறைச்செயல்களில் ஈடுபட்டதாக, குறிப்பிட்ட சம்பவங்களை தமது கவனத்துக்குக்கொண்டுவந்தால், அந்த அங்கத்தினர்கள்மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதாகவும் திரு. தாக்கரே, பம்பாய் தென்னிந்திய பிரமுகர்களிடம் உறுதி கூறியதாகவும் இந்த அறிக்கை கூறுகிறது.

## ரயில் தடம் புரண்டது

### 22 பேர் காயம்

பம்பாய், செப். 14

அஹமதபாத் சென்றுகொண்டிருந்த குஜராத் எக்ஸ்பிரஸ் ரயிலின் நான்கு பெட்டிகள் அஹமதபாத்திலிருந்து 25 மைல் தூரத்திலுள்ள கோதஜ் என்ற ஸ்டேஷன் வழியாகச் சென்றுகொண்டிருந்தபோது, தடம் புரண்டு ஒருவர் பலத்த காயமடைந்தார். மற்றும் 21 பேருக்கு இலேசான காயங்கள் ஏற்பட்டன.

## வெடிவிபத்தில் 5 பேர் மரணம்

பம்பாய், செப். 14

பம்பாய் நகரில் சாயங்களும் ரசாயனங்களும் வைக்கப்பட்டுள்ள ஒரு கிடங்கில் ஏற்பட்ட வெடிவிபத்தொன்றைத் தொடர்ந்து பற்றிக்கொண்ட தீயில், 5 பேர் அதேஇடத்தில் [illegible] மற்றும் 5 பேர் [illegible] தனர்.

## சென்னை தீ நிவாரண நிதி

சென்னை, செப். 14

சென்னை தீ விபத்தினல் பாதிக்கப்பட்ட மக்களுக்கென முதல் மந்திரி திரு. அண்ணுதுரை திரட்டிவரும் நிதிக்கு இதுவரை 25 லட்சத்து 29 ஆயிரத்து 310 ரூபா வரை சேர்ந்துள்ளது.

## இஸ்ரேல் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது

கெயிரோ, செப். 14

சூயஸ் கால்வாயின் மேற்குப் பகுதியில், குவாண்டாரா என்னுமிடத்துக்கு மேலாக ஐக்கிய அரபுக் குடியரசு வானவெளியில் இரு இஸ்ரேல் விமானங்கள் அத்துமீறிப் பிரவேசித்ததாகவும், அவற்றில் ஒன்றைச்சுட்டு வீழ்த்தியதாகவும் கெயிரோவிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவம் நேற்று முன்தினம் நண்பகலுக்குச் சற்றுப்பின்னர் நடைபெற்றது. இரண்டு விமானங்களில் ஒன்று தப்பியோடிவிட்டதாகவும், குவாண்டாராவில் ஐ. அ. கு. துருப்புகள் மீது இஸ்ரேல் துருப்புகள் சுட்டதாகவும் கெயிரோ ரேடியோ அறிவித்துள்ளது.

## ஆசிரியர்களுக்கு இலவச வைத்திய சேவை

சென்னை, செப். 14

தமிழகத்தில் இனிமேல் ஆசிரியர்கள் அனைவருக்கும் இலவச வைத்திய சேவை அளிக்கப்படுமெனத் தமிழக சுகாதாரமந்திரி திரு. சாதிக் பாட்சா அறிவித்துள்ளார்.

## மார்க்ஸியவாதி குத்திக் கொலை

திருவனந்தபுரம், செப. 13

கன்னனூர் மாவட்டத்தில் கூதூர் என்னுமிடத்தில் மார்க்ஸியவாதிகளுக்கும், ஜனசங் ஆதரவாளர்களுக்குமிடையே ஏற்பட்ட ஒரு மோதலில் திரு. கருணகரன் என்ற மார்க்ஸியவாதிக்குதிலல்கொப்த்பட்டார்.

## பாலாவி கொலை வழக்கு

### சுப்ரீம் கோர்ட்டுக்கு பாரப்படுத்தப்பட்டது

சாவகச்சேரி, வியா.

கச்சாய்-பாலாவி கொலை வழக்கை விசாரணை செய்த சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா விசாரணை முடிவில் எதிரிகள் இருவரையும் றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டு சுப்ரீம் கோர்ட் விசாரணைக்குப் பாரப்படுத்தினர்.

இவ்வழக்கில் இவ்வருடம் ஜூலை 4-ம் திகதி கச்சாய்-பலாவியில் ஐந்து பிள்ளைகளின் தந்தையான கணபதிப்பிள்ளை வீரவாகுவைக் கொலை செய்ததாக சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை வைரவி கந்தையா ஆகிய இருவர் மீதும் சாவகச்சேரிப் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

## கவிதைப்போட்டியில் முதல் பரிசு

யாழ்ப்பாணம், வெள்ளி

பதுளை பாரதி 'வித்தியாலயத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நிகழ்த்திய கவிதைப்போட்டியில் முதற்பரிசு காரை. சுந்தரம் [illegible] ளது [நி]

# ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபன மாநாடு

### அந்நிய கூலிப்படைகளை அகற்ற தீர்மானம்

கின்ஷாஷா, செப். 14

இங்கு கூடியுள்ள ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபன நாடுகளின் மாநாடு. அந்நிய கூலிப்பட்டாளங்களை நாடுகள் அமர்த்திக்கொள்வது தடைசெய்யப்படவேண்டுமென ஐ.நா.வைக்கேட்டுக்கொண்டுள்ளது.

கொங்கோவின் கிழக்குப் பகுதியிலுள்ள புக்காவு என்னுமிடத்தில் பணிபுரியும் அந்நிய கூலிப்பட்டாளங்கள் உடனடியாக வெளியேற்றப்படவேண்டுமென்றும், இல்லையேல் அவற்றை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபன நாடுகள் மேற்கொள்ளுமெனவும் மாநாடு தெரிவித்துள்ளது.

ஐ. நா. பொதுக்காரியதரிசி யூ தாண்ட், மாநாட்டின் இறுதிக்கட்டத்தில், இன்று உரை நிகழ்த்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சீன - கம்போடிய உறவுகள் பற்றி இளவரசர் ஷிஹானூக்

நாம்பெனி, செப். 14

பீகிங்கிலுள்ள கம்போடியத்தூதரகத்துக்கு முன்னல் ஆர்ப்பாட்டம்எதுவும் நடந்தால், அங்குள்ள கம்போடியத் தூதுவரைத் திரும்ப அழைத்துவிடுவதாகக் கம்போடியஇளவரசர் நொரோடம் ஷிஹானூக் கூறியுள்ளார்.

சீன, கம்போடியாவின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாது விட்டால் சீனவுடனன ராஜிய உறவுகளைக் கம்போடியா முறித்துக் கொள்ளாது என்றும் இளவரசர் ஷிஹானூக் தெரிவித்தார்.

**இளைஞர் ஆர்ப்பாட்டம்**

நாம்பெனில், இளவரசர் ஷிஹானூக்குக்கு ஆதரவாக ஆயிரக்கணக்கான கம்போடிய இளைஞர் ஆர்ப்பாட்டம் செய்தனர். ஆர்ப்பாட்டக்காரர்களிடையே பேசுகையிலேயே இளவரசர் ஷிஹானூக் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சீன, தனது தவருன செயல்களினலேயே, உலகிலுள்ள பல நாடுகளினதும் எதிர்ப்பைச் சம்பாதித்துக் கொண்டிருப்பதாகவும் இளவரசர் ஷிஹானூக் குறிப்பிட்டார்.

## 'சுமார் ஆயிரம் பேரை மலேரியா பீடித்துள்ளது'

கொட்டாஞ்சேனை, வியாழன்

மலேரியா தடுப்பு இயக்கத்தினர் இப்பொழுது கொழும்பு பகுதியில் மலேரியா இருப்பதாகக் கண்டுபிடித்துள்ளனர். இவ்வியக்கத்தினர் நடத்திய பரிசோதனைகளிலிருந்து கொட்டாஞ்சேனைப்பகுதியில் இருவர் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரியவருகிறது.

இவ்வருடம் ஆகஸ்ட் வரையில் மலேரியாவினல் பாதிக்கப்பட்டவர்கள் தொகை 900க்குமேற்பட்டதாகும் எனக் கூறப்பட்டிருக்கின்றது. அநேகமாக மலேரியா ஆற்றுப்பள்ளங்களையடுத்த இடங்களிலேயே அதிகமாகக் காணப்படுகிறதாம். வடமேற்கு, வடமத்திய மாகாணங்களிலேயே இந்நோய் அதிகமாகக் காணப்படுகிறதாம்.

நாட்டின் பல பகுதியிலும் மலேரியா தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருவதாக மலேரியா தடுப்பியக்க சுப்பிரீன்டன்ட் டாக்டர் ஏ. விக்கிரமசிங்கா கூறினர்.

## தரம்பிரித்தலுக்கு உள்ளான முதற் பாடசாலைகள்

புன்னலைக்கட்டுவன், வியாழன்

அடுத்த ஆண்டு நடக்கவிருக்கும் பாடசாலைத் தரம் பிரித்தல் முறைக்கு முன்னேடியாக கல்வித்திணைக்களம் சிலபாடசாலைகளுக்கு அறிவித்தல்கள் கொடுத்துள்ளது.

தும்பளை சிவப்பிரகாசவித்தியாசாலை 1-தொடக்கம் 8-ம் வகுப்புவரை வைத்திருக்கலாமென்றும், பருத்தித்துறை மகளிர்மிஷன் பாடசாலை ஜி.சி.ஈ. வகுப்புவரை வைத்திருக்கலாமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. வடமராட்சி கிழக்குப்பகுதி பின்தங்கியதென்று உடுப்பிட்டி எம்.பி. திரு. எம். சிவசிதம்பரம் கூறியதன் காரணமாக இப்பகுதியைச் சேர்ந்த நாகர்கோவில், உடுத்துறைப்பாடசாலைகள் ஆரம்பம் தொடக்கம் ஜி.சி.ஈ வகுப்புகள் வரை வைத்திருக்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

இம்மாதிரியான மாற்றங்களுக்கான அறிவித்தல்கள் பல பகுதிகளுக்கும்வந்து கொண்டிருப்பதாகத்தெரிகிறது.

## அபராதம் ரூ. 75

காங்கேசன்துறை, வியா.

சுன்னகத்தைச் சேர்ந்த தில்லையம்பலம் என்பவர் சட்டவிரோதமாகச் சாராயம் வைத்திருந்ததாக சுன்னகம் பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. டி. எஸ். நிற்சிங்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

எதிரிக்கு மாஜிஸ்திரேட் 75 ரூபா அபராதம் அல்லது 6 வாரம் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

குரும்பசிட்டி, வியா.

யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் பாடசாலைகளுக்கிடையிலான நாடகவிழா இலங்கை கலைக்கழக தமிழ் நாடகக் குழுவின் ஆதரவில் இம்மாதம் 21-ந் திகதி முதல் நடைபெறவிருக்கின்றது. மூன்றுநாட்களுக்கு தொடர்ந்து நடக்கவிருக்கும் இந் நாடகவிழா, தினமும் மாலை 6-15மணிக்கு ஆரம்பமாகும்

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

## டாக்டரானர்கள்

கொழும்பு, வியாழன் பின்வருவோர் எம். பி., பி.எஸ் சோதனையில் சித்தி யெய்தியுள்ளனர்.

பெரதெனியா: எஸ். ஏரம்ப மூர்த்தி, கே. சந்திர சேகரம், எஸ்.டி.எம்.காசிம், ஜ. டபிள்யு. ஹாசான், செல்வி எஸ்.ஜி காராளசிங்கம், பி.குமாரநாயகம், எம். ஏ.எஸ் மரக்கார், சி. எஸ். நச்சிஞர்க்கினியன். ஜே. சி. பி.சாமுவேல், செல்வி எம். ஆர்.பி.சவரிமுத்து, கே. சிவலிங்கம், வி. சிவபாதசுந்தரம், எஸ், சிவலோகநாதன், எஸ். சிவசுப்பிரமணியம், எஸ். வெதாசன், ஏ. சோமஸ்காந்தா, எம். எஸ் தம்பிராஜா, ரி. தங்கவேலு. கே திருநாதன், செல்வி ஐ. துரைராசா,

கொழும்பு: இ சி. ஆனந்தப்பா, செல்வி ஆர். செல்லப்பா, ரி.ரி. சிதம்பரநாதன் எம். துரைசிங்கம், செல்வி ஜி. கணபதிப்பிள்ளை, எம். நடராஜா, ஆர். நடராஜா, செல்வி ஆர்.எஸ். நல்லையா, செல்வி பி. இராமலிங்கம் ஆர். எம். இரத்தினேசர், எஸ். சர்வானந்தா, ஆர். சதானந்தன், செல்வி எம். சிங்கராயர், செல்வி பி. பி. திரவியம், எஸ். சந்திரமோகன்.

## வழக்கறிஞர் கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி அகில இலங்கை வழக்கறிஞர் சங்கத்தின் கூட்டமொன்று இம்மாதம் 17-ந்திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது. திரு. ஸ்ரீராமநாதன் தலைமையில் இக் கூட்டம் வழக்கறிஞர் சங்க நூலகமண்டபத்தில நடைபெறுமென்றும், 18 ந்திகதி வழக்கறிஞர்களுக்கும், டாக்டர்களுக்குமிடையிலான கிரிக்கெட் போட்டியொன்று யாழ்.மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெறுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த.நி.)

## கார்த்திகைக் காய் முக்கொலை வழக்கு

காங்கேசன்துறை, வியா. வட்டுக்கோட்டை பிலத்தை கார்த்திகைக்காய் முக்கொலைவழக்கு இன்று மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. டி. எஸ். நித்சிங்கா முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இம்மாதம் 19ந் திகதி இன்ஸ்பெக்டர் மென்டிஸ் விசாரணை செய்யப்படுவார்.

## "காலத்தால் அழியாது"

வெள்ளவத்தை, வியா. "பாரதியார் இன்றைய சமுதாய மக்களின் பிரச்சினைகள் அனைத்திலும் பங்கு கொண்டார். சிலவற்றைத் தீவிரப்படுத்தினர். மொழிப் பற்றையும், நாட்டுப்பற்றையுமூட்டி, பகுத்தறிவுக்கொள்கையையும் ஸ்திரப்படுத்தினர்.

பல்லாயிரக்கணக்கான இளம் உள்ளங்களைத் தனது பாதையிலே செல்லவைத்தவர் அவர். பாரதி பற்றிய ஆராய்ச்சிகளும் அவற்றால் ஏற்படும் புகழ்வார்த்தைகளும் காலத்தால் அழியாதவை."

இவ்வாறு மேல்மாகாணப் பிரதம வித்தியாதிகாரி திரு. வெ. சங்கரலிங்கம். வெள்ளவத்தை சரஸ்வதி மண்டபத்தில் கொழும்புஇந்துகனிஷ்ட பாடசாலையின் ஆதரவில் நடைபெற்ற பாரதி விழாவுக்குத் தலைமை வகித்து பேசுகையில் கூறினர்.

திரு. ஆ. கந்தையாவும் பேசினர்.

பேச்சுப்போட்டியில் பங்கு பற்றிய கல்லூரி மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன.


# 50 சதத்துடன் விரைவில் செல்வந்தராகுங்கள்

ஒவ்வொரு வாரமும், நூற்றுக்கு மேற்பட்டவர்கள் விரைவில் செல்வந்தராகி டுகின்றனர்.



அடுத்த உங்கள் முறை ஆகலாம்

50 சதத்திற்கு நீங்கள் புத்தம் புதிய கார் ஒன்றையும் பெருந் தொகைக்கான காசோலையையும் பெறலாம்.




அதிர்ஷ்டத்தை எதிர்பார்த்து இராதீர்
உங்கள் தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டுகளை இன்றே வாங்குங்கள்.

1967 செப்டம்பர் 21 ந் திகதி 160-வது சிட்டிழுப்பு மகியங்காணவில் நடைபெறும்.

1-வது பரிசு ரூ. 100,000/- அல்லது புத்தம் புதிய ஒப் பெல் ரெக்கோர்ட் காரும் ரூ. 81,350/- ரொக்கமும் ★



2-வது பரிசு ரூ. 40,000/- அல்லது புத்தம் புதிய மொரிஸ் மினிமோர்க்கும் ரூ. 30 900/-ரொக்கமும் ★



3-வது பரிசு ரூ. 10,000/- அல்லது புத்தம் புதிய ட்ராக்டர் [மெஸர்ஸ் சத்தியாவதி ஸ்டோர்ஸ் & மோட்டார் ட்ரான்ஸ்போர்ட்டர்ஸ் லிமிட்டெட்டின் உபசரணையுடன்] கம்பெனிபட்டியல் விலை ரூ. 14,000/- வாகிய இந்த ட்ராக்டர் விசேஷமாக குறைக்கப்பட்டவிலை ரூ. 10, 000/-க்கு வழங்கப்படுகின்றது.



★ இவைகள் தீர்வை உட்பட ஏழமையான கம்பெனி பட்டியல் விலைக்கு குறைந்ததாகும்.

100 ஆறுதல் பரிசுகள்:

இந்தச் சிட்டிழுப்பில் 100 ஆறுதல் பரிசு பெற்றவர்களுக்கும், மெஸர்ஸ் ஈ. பி. கிரீவி & கம்பெனி லிமிட்டெட்டின் உபசரணையுடன், அவர்கள் விரும்பினால் தங்கள் பரிசுத்தொகையிலிருந்து விசேஷமாக குறைக்கப்பட்ட விலையான ரூ. 215/-க்கு ஒரு ரோட் மாஸ்டர் சைக்கிள் வாங்கலாம்.



கடந்த இரண்டு கார் சிட்டிழுப்புகளில் 100 அதிர்ஷ்டப் பரிசு பெற்றவர்கள் தலா ரூ. 1543-10 பரிசு பெற்றார்கள்.

இந்தக் கார்களையும், ட்ராக்டர்களையும், சைக்கிள்களையும் வாங்குவதற்கான சந்தர்ப்பம் சிட்டிழுப்புக்குப் பின்னர் 14 நாட்களுக்குமட்டுமே வழங்கப்படும்.

ஞாபகத்திலிருக்கட்டும்:-
நீங்கள் வாங்கும் ஒவ்வொரு தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டும், அதிர்ஷ்டத்தின் வாயிலுக்கு உங்களை அழைத்துச் செல்கிறது.
50 சதம் முதலீடு செய்து பெரும் செல்வம் தேடுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### விற்பனைக்கு

மலிவு விலையில் கட்டிடக்காணி துண்டுகள் விற்பனைக்கு இருக்கின்றன.

யாழ்ப்பாணம் வீரமாகாளி அம்மன் கோவிலுக்குச் சமீபத்தில், பஸ் போக்குவரத்துப் பிரதான வீதிகள் இரண்டின் மத்தியிலுள்ள அம்மன் வீதியில் கட்டிடக் காணித்துண்டுகள் சில உடனடியாக விற்பனைக்கு உண்டு. தவணைமுறையில் பணம் கட்டுவதற்கு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

விபரங்களுக்கு
H. P. T.,
61, கெய்ஸர் வீதி,
கொழும்பு.
அல்லது
த. வடிவநாதன்,
'பூகன்ஸ்'
71, மின்சாரநிலையவீதி,
யாழ்ப்பாணம்.
247

### தேவை

வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவு சமாசம்,
111, பிரதானவீதி,
யாழ்ப்பாணம்.

மேற்படி சமாசத்துக்கு 50000 'சி' தர சாக்குகள் தேவை. 19.9-67 பகல் 12 மணிக்கு முன்னர் விண்ணப்பப் பத்திரங்களை நிபந்தனைகளுடன் பெற்றுக்கொள்ளவும்.
248 காரியதரிசி.

வலி.மேற்கு

## விளையாட்டு போட்டிமுடிவுகள்

சுழிபுரம், வியாழன்

வலிகாமம் மேற்கு இரண்டாம் பிரிவு விளையாட்டுக் கழகச் சங்கங்களின் முதலாவது விளையாட்டு விழா சுழிபுரம் அரசினர் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டு மைதாத்னதில் நடைபெற்றது. போட்டி முடிவுகள் சில வருமாறு:

மரதன் ஓட்டம் 8 மைல்: இ. இராசேந்திரன், பொ. கனகரத்தினம், ஆ. இரவிநேசன்.

17 மைல் சயிக்கிள் விரைவோட்டம்: க. மரியதாசன். கே. பராபரன், இ. ஆனந்தராசா.

உயரம் பாய்தல்: பி. ராஜேந்திரகுமார், இ. கிருஷ்ணதுரை, க. புவனேந்திரராசா.

பரிதிவட்டம் எறிதல்கீழ்ப் பிரிவு பெண்: ந. வசந்தமலா, சி. திலகவதி, க. குகபூசனி.

மைல் ஓட்டம்: ஆ. இரவிகேசன், இ. இராசேந்திரன், இ. ஐங்காநாதன்.

விநோத உரைப்போட்டி: ரி. இரத்தினவேல், ஏ. சிவரத்தினம், எஸ். ஆறுமுகம்.

கயிறிழுத்தல்: சுழிபுரம் சூட்டிங் ஸ்ராஸ், சில்லாலை இருதய விளையாட்டுக் கழகம்.

நிதான ஓட்டம்: ஐ. சரஸ்வதி. க. குகபூஷணி, க. கலாதேவி.

## பெண் சாரணர் பொன்விழா

குரும்பசிட்டி, வியா.

இலங்கை பெண்கள் சாரணர் சங்கம் தனது பொன்விழா கொண்டாட்ட வைபவத்தை இம்மாதம் நடாத்த ஒழுங்குகள் செய்துவருகின்றது. இலங்கையில் பெண்கள் சாரணர் இயக்கத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்த திருமதி கிறீன் நீ கல்வேலி இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

## பாரதி வாழ்வு

புன்னாலைக்கட்டுவன், வியாழன்

'பத்துப்பேர் மட்டுமே அன்று பாரதியின் மரணச் சடங்கில்கலந்துகொண்டனராம். ஆனால் ஐம்பது ஆண்டுகளில் தமது சுதந்திர உணர்ச்சியையும், ஏகாதிபத்திய எதிர்ப்புணர்ச்சியையும் தூண்டும் கவிதைகள் மூலம் தமிழ் கூறும்நல்லுலகுக்கு மட்டுமன்றி, சோஷலிஸ நாடுகளுக்கும் பாரதி தமது புகழைப் பரப்பினார்.

இவ்வாறு கோப்பாய் கிறிஸ்தவகல்லூரி ஆசிரியை திருமதி வேதவல்லி கந்தையா, உரும்பராய் இந்துக்கல்லூரி சரித்திர-அரசியல் மன்ற ஆதரவில்நடந்த பாரதிவிழாவில் பேசுகையில் குறிப்பிட்டார். விழாவுக்கு திரு.வி. புஷ்பராசா தலைமைவகித்தார்.

## நடாபிரதர்ஸ் சாம்பியன்

யாழ்ப்பாணம், வெள்ளி

துன்னாலை சுடர்ஒளி விளையாட்டுக்கழகத்தின் மூன்றாவது ஆண்டு, கோவிந்த சுவாமி வெற்றிக் கேடயத்துக்கான கரபந்தாட்டச்சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டம் அல்வாய் நடாபிறதர்ஸிற்கும் வடமராட்சி தெரிவுக்கோஷ்டிக்கு மிடையே சுடர்ஒளிவிளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

விளையாட்டுக் கழகத்தின் மூன்றாவதாண்டு நிறைவு விழாப்போட்டியில் வெற்றி பெற்றவருக்கு உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் வருகைதந்து பரிசளித்தார். இருகோஷ்டியினருக்குமிடையில் நடந்தகடும் போட்டியில் நடாபிறதர்ஸ் முறையே 15—16, 13—15, 15—4 புள்ளிகள் பெற்று வெற்றியீட்டியது. [நி.]

## இங்கிலாந்து செல்கிறார்

குரும்பசிட்டி, வியா.

குரும்பசிட்டியைச் சேர்ந்த கந்தையா ஈஸ்வரமூர்த்தி (வயது 25) இலட்ரோனிக் என்ஜினியரிங்துறையில டிப்ளோமா பட்டம் பெறுவதற்காக இம்மாதம் 15-ந் திகதி இங்கிலாந்து புறப்பட்டுச் செல்லுகின்றார். இவர் லங்காசயர் பொல்டன் சர்வகலாசாலையில் இருவருடகால பயிற்சி பெறுவார். இலங்கைப் பல்கலைக் கழகப் பட்டதாரி மாணவரான இவர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார். வர்த்தகர் திரு. பூ. வ. கந்தையாவின் புதல்வர் இவர்.

## புதிய நிர்வாக சபை

யாழ்ப்பாணம். வெள்ளி

வேலணை மேற்கு பெரிய புலம் முடிப் பிள்ளையார் கோவில் நிர்வாக சபைத் தெரிவுக்கான பொதுக் கூட்டம் சென்ற 11-ந் திகதி மாலை திரு.நா.சரவணமுத்து தலைமையில்நடைபெற்றது. இக் கூட்டத்தில் புது வருட நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு.நா. சரவணமுத்து. செயலாளர்: திரு. ப. அரசகேசரி. தனாதிகாரி: திரு.க.சண்முகலிங்கம்.

நிர்வாக சபைத் தெரிவின் பின் கூட்டத்தில் பேசிய திரு.ஆ. கணபதிப் பிள்ளை, கோவிலில் குழாய் மூலம் குடி தண்ணீர் வசதி செய்து தருவதாகக் கூறினார்.

## "விழிப்புணர்ச்சி வேண்டும்"

கொழும்பு, வியாழன்

தமிழ் மொழிச் சட்டத்தை அமுல் நடத்துவதில் அரசாங்கத்திலும் கூட்டுத் தாபனங்களிலுமுள்ள தமிழ் பேசும் ஊழியர்களே விழிப்புணர்ச்சியுடனிருந்து செயல் புரிய வேண்டும்" என அரசாங்க கூட்டுத்தாபன ஊழியர் சங்கத்தலைவர்திரு.வே. கனகரத்தினம் கொழும்பில் நடைபெற்ற சங்கத்தின் நான்காவது ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

பஸ்தாமதம்:

## அரசாங்க ஊழியர் திண்டாட்டம்

சாவகச்சேரி, வியா.

சங்கானை — சாவகச்சேரி பஸ்சேவைஒழுங்கற்ற முறையில் அமைந்திருப்பதால் சங்கானையிலிருந்து சாவகச்சேரிக்குவரும் பிரயாணிகள் பெரிதும்பாதிக்கப்பட்டுள்ளனர். சங்கானையிலிருந்து சாவகச்சேரிக்கு வரும் அரசாங்கஊழியர் நேரத்திற்கு கந்தோருக்கு வரமுடியாது திண்டாடுகின்றனர்.

## உற்பத்தியாளர் கஷ்டம்

புன்னாலைக்கட்டுவன், வியா.

கோப்பாய்ப்பகுதிபீடி உற்பத்திச் சங்கத்தின்மூலம் பீடிப் புகையிலையைக் கடனாக வாங்கியோர், ஆண்டுகள்மூன்றாகியும் இதுவரை தமது கடன் பணத்தைத் திருப்பிக் கொடுக்காமையால் பீடிப்புகையிலைக் கமக்காரர் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

கொழும்பில்

## இலவச சமய பாடபோதனை

கொட்டாஞ்சேனை, வியா.

கொழும்புப் பகுதியில் வாழும் சைவசமய மாணவர்களுக்கு ஓர் இலவச சமயபாட வகுப்பினை நடாத்த கொழும்பு விவேகானந்தசபை முடிவு செய்துள்ளது. இவ்வகுப்புக்கள் இம்மாதம் 17-ம் திகதி ஆரம்பமாகுமெனவும் போயா தினத்திலும் அதற்கு முந்திய தினத்திலும் இவ்வகுப்புகள் நடாத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

காணி

சுன்னாகம் பொலிஸ்நிலையத்திற்குமுன் 4 1/2 பரப்புக் காணி விற்பனைக்குஇருக்கிறது. தேவை யாரோர் கீழ்க்காணும் விலாசத்திற்கு தொடர்புகொள்ளவும். சி. கனகலிங்கம், 30/7 தாமரக்கேணி ரோட், மட்டக்களப்பு. 2356

காணி:

கொக்குவில், பிரம்படி வாசிகசாலை இருக்கும் காணியில் 2 1/2 பரப்பு விற்பனைக்குண்டு. விபரம் வேண்டுவோர் பிரம்படி பொ. தர்மலிங்கத்திடம் நேரில் தொடர்புகொள்ளவும். 2358

### தேவை

G. C. E. ஐந்துபாடம் சித்தியடைந்தவர்கள் ஆசிரியைகளாகக் கடமையாற்றத்தேவை. உரொக்கப் பிணை செலுத்தக்கூடியவர்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணிவரை நேரில் விண்ணப்பிக்கவும். வடமாகாணத்தில் இருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அதிபர், சிறுவர் பாடசாலை, 422, கே. கே. எஸ். ரோட், வண்ணார் பண்ணை. 2359


2-வது வெற்றி வாரம்!

கெபிடல் [கொட்டாஞ்சேனை] பிளாஸா [வெள்ளவத்தை] விஜயா [மட்டுநகர்]
விஜிதா [ஹட்டன்] மொடர்ன் [பதுளை] ஸ்ரீகிருஷ்ணா [திருமலை]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

புதுமையான கதை! உணர்ச்சிமிக்க வசனம்!
காதிற்கினிய பாடல்கள்!
முழுவதும் ஒரு ஹாஸ்ய விருந்து!

ஜெய்சங்கர், ரவிச்சந்திரன், நாகேஷ், விஜயலட்சுமி, ரத்னா, மாதவி
நடித்த

நாம் மூவர்

டைரக்ஷன்: ஜம்பு பாடல்கள்: வாலி இசை: என்.எம்.எஸ்.

3-வது மாதம் கிங்ஸ்லி [கொழும்பு]
மற்றும் 5 திரைகளில்
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி நடித்த
அன்பே வா

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA.
தினசரி 2-30, 6-30, 9-30
போயா தினங்களில் 4 காட்சி
காந்தராவ் — வசந்தி
நடித்த
வீரபாண்டியன்

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஜெய்சங்கர் — விஜயா
நடித்த
பஞ்சவர்ணக்கிளி

மனோஹரா
[யாழ்ப்பாணம்]
Daily 4.45, 7.00, 9.45.
Zorros Fighting Legion
[Serial]

REGAL JAFFNA
Time: 4-30 7-00 p. m.
9-45 p. m.
Peter Falk & Bourdelain
in
Too Many Thieves

சிங்கம் மார்க்
LIONBRAND SANDANADI THYLAM
சிங்கமார்க்
சந்தனாதித் தைலம்
வாங்கி உபயோகியுங்கள், எங்கும் கிடைக்கும்.
தயாரிப்பாளர்கள்:- போன் 23006 93850
ப.மு.& சன்ஸ்
88, செட்டியார் தெரு. கொழும்பு 11


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மரத்தில் தொங்கிய பிணம்

# கொலை: விசாரணைக்கு நீதவான் உத்தரவு

வவனியா, புதன்

ஓமந்தைப் பகுதியிலுள்ள ஆறுமுகத்தான் புதுக்குளம் என்ற இடத்தில் பட்ட மரமொன்றில் அழுகிய நிலையில் தொங்கிக்கொண்டிருக்கக் காணப்பட்ட சடலம் சம்பந்தமான மரண விசாரணை இன்று நடைபெற்றது.

காவலுரென்றலரின் மண்டையில் காயமிருந்ததாகவும், இவர் மரணமான பிறகே தொங்கவிடப்பட்டிருக்கவேண்டும் என்றும் பிரேதபரிசோதனை செய்த அனுராதபுரம் சட்டவைத்திய அதிகாரி விசாரணையின் போது கூறினர்.

மரணவிசாரணை நடத்திய வவனியா மேலதிக நீதவான் ஜனாப் எம். சலாப்தீன் இது ஒரு கொலை என்று கருதி அதுசம்பந்தமாக பூரணமாக விசாரணை நடத்தும்படி பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

# இருவருக்கு றிமாண்ட் ஒருவர் பிணையில் விடுதலை

## களவு சம்பந்தமாக பிடிபட்டவர்கள்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற களவுகள் சம்பந்தமாக பொலிசார் கைது செய்யப்பட்டவர்களில் இருவர் றிமாண்டில் வைக்கப்பட்டனர். ஒருவர் 1500 ரூபா பிணையில் விடுதலை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

கடந்த ஒரு வார காலமாக யாழ்ப்பாணத்திலுள்ள பல கடைகளிலும் நடைபெற்ற களவுகளிலும் காணமல்போன பல பொருட்கள் பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளன. சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் நேற்று யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. எம். ஜமீல் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது இராசரத்தினம் இரத்தின பாலசிங்கம், தர்மலிங்கம் விஜயராஜா ஆகிய இருவரையும் றிமாண்டில்வைக்குமாறும் முத்துசாமி தங்கராசாவை 1500 ரூபா பிணையில் விடுதலை செய்யுமாறும் மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டார். (ந. நி.)

பொலிஸ் அறையில் இறந்தவர் உடலில்

# "வெளியே 34 காயம்; உள்ளே 11 காயம்"

## டாக்டர் சாட்சியம்

யாழ்ப்பாணம், வியா

"மரணமானவரை இம்மாதம் 5ந் தேதி காலை 3-30 மணியளவில் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் பிரேத பரிசோதனைசெய்தேன். அவரது உடம்பின் வெளிப்புறத்தில் 34 காயங்களும், உட்புறத்தில் 11 காயங்களுமாக மொத்தம் 45 காயங்கள் இருந்தன."

இவ்வாறு இம்மாதம் 4ந் தேதி இரவு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலுள்ள பாதுகாப்பு அறையில் இறந்துகிடந்த கோப்பாயைச் சேர்ந்த செல்லன் செலைத்தம்பியின் [24 வயது] மரணம் சம்பந்தமாக நேற்று நடைபெற்ற மரணவிசாரணையின்போது, மரணமானவரைப் பிரேத பரிசோதனைசெய்த சட்டவைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சுப்பிரமணியம் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. எம். ஜமீல் இன்று விசாரணையை நடத்தினார். மரணமானவர் இம்மாதம் 4ந் தேதி நல்லூர் சட்டநாதர் கோவிலடியில் ஒரு பெண்ணின் தங்கநகையைத் திருடினரென்ற சந்தேகத்தின்பேரில் யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையத்தில் பாதுகாப்பில் வைக்கப்பட்டபோது இறந்ததாக ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது.

டாக்டர் எஸ். சுப்பிரமணியம் சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது: மரணமானவரின் உடம்பிலிருந்த காயங்கள், அவர் கேணிக்குள் விழுந்ததாலோ அன்றி பொதுசனங்களால் கட்டிப் பிடிக்கப்பட்டதாலோ அல்லது பொதுமக்களால் தாக்கப்பட்டதாலோ ஏற்பட்டிருக்கலாம். இவர், இம்மாதம் 5ந் தேதி காலை 3 மணிக்கும் 5 மணிக்குமிடையில் இறந்திருக்கலாம். இறந்தவரின் உடம்பில் பொல்லால் அடிக்கப்பட்ட காயங்களும் இருந்தன. இச் சமயத்தில் பொலிஸ் தரப்பில் ஆஜரான உதவிப் பொலிஸ்சுப்பிரிண்டன் திரு. ஆர். சி. தவராஜா டாக்டரிடம் 'அவை எப்படியான பொல்லுகள் எனக் குறிப்பிடமுடியுமா' என்று கேட்டபோது அவை மென்மையான எந்தப் பொல்லாகவும் இருக்கலாமென டாக்டர் தெரிவித்தார். அத்துடன் அப்பொல்லுகளால் பொலிஸார் தான் தாக்கியதென்று கூறமுடியாதென்றும். பொதுமக்களும் இப்படியான பொல்லுகளால் தாக்கியிருக்கலாம் என்றும் டாக்டர் குறிப்பிட்டார்.

நல்லூரைச் சேர்ந்த சந்தான கிருஷ்ணன் என்பவர் சாட்சியமளிக்கையில் சம்பவம் நடந்தபோது தான் நல்லூர்க் கோவிலிலிருந்து வந்துகொண்டிருந்ததாகவும், அப்பொழுது சட்டநாதர் கோவில் வாசலில் 'சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடுகிறுன்' என்று கத்தியதாகவும், அப்போது இறந்தவர் அருகிலிருந்த கேணிக்குள் கிடந்ததாகவும் அவரை வெளியே தூக்கி அங்கு நின்ற நல்லூர் உபதபால் நிலைய அதிபர் திரு. கோபாலிடம்தான் ஒப்படைத்ததாகவும் தெரிவித்தார். உதவி பொலிஸ் சுப்பிரீன்டனுல் இவர்குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

பொலிஸ் தரப்பில் குற்றத்தடுப்புப் பகுதி இன்ஸ்பெக்டர் திரு. மெண்டிஸ், தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. பொங்ஸோ, ஆகியோரின் உதவியுடன் உதவி பொலிஸ் சுப்பிரீன்டன் திரு. ஆர். சி. தவராஜா ஆஜராகியிருந்தார். இறந்தவர் சார்பில் புறக்டர் [illegible] இராசரத்தினம் ஆஜராகியிருந்தார். மாஜிஸ்டிரேட் மேல்விசாரணையை இம் மாதம் 21-ம் திகதிக்கு ஒத்திவைத்தார். [ந. நி.]

# கணவன் இருந்தும் இல்லாத நிலை

வவனியா, வியா.

கணவன் உயிருடன் இருந்தும் தனது மனைவியின் ஈமக்கிரியைகளை முன்னின்று நடத்தவில்லை. அயலவர்கள் பணம் சேர்த்து அந்தப்பெண்ணின் ஈமக்கிரியைகளை நடாத்தினர்கள். இச்சம்பவம் வவனியாவில் நடைபெற்றது.

ஐந்து குழந்தைகளுக்கு தாயான இந்தப் பெண்ணின கணவன் 'கள்ளத்தோணி' என்று கைதுசெய்யப்பட்டு இந்தியாவுக்கு அனுப்பப்பட்டதாலேயே இப்பரிதாப நிலைமைஇந்தப்பெண்ணுக்கு ஏற்பட்டது.

'சிங்கள..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஜோன் கொத்தலாவலையின் அரசாங்கத்தின் நடத்தையால் கிழக்கு, வடக்கு மாகாணங்களிலுள்ள நாங்கள் பெப்ரவரி 4-ம் திகதியைத் துக்கதினமாக அனுஷ்டித்தோம். அன்று இவ்விரு மாகாணங்களிலும் ஒரு ஹர்தால் அனுஷ்டிக்கப்பட்டது. மக்கள் தமது உணர்விலும் உள்ளத்திலும் உள்ளவற்றை நடைமுறையில் காட்டினர்கள்

அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களினது நடத்தையால் தமக்கு வழங்கப்பட்டதாகக் கருதப்பட்ட சுதந்திரத்தைத் தாம் இழந்துவிட்டதாகவே ஈழத் தமிழின மக்கள் உணருகிருர்கள். ஈழத் தமிழருக்காக ஈழத் தமிழரால் நடத்தப்படும் ஈழத் தமிழரின் அரசாங்கம் ஒன்று இலங்கையில் இல்லை என்றே அவர்கள் கருதுகிறுர்கள். ஈழத் தமிழினத்தைப் பொறுத்தவரையில் எம் இனம் பிரித்தானிய எசமானர்களுக்குப் பதிலாகச் சிங்கள எசமானர்களுக்கு அடிமைப்பட்டிருக்கிறதென்று கவலைப்படுகிறோம். (நி)

'இறந்தவர்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

முருகன் ஆகியோர் 'கொலை செய்ததாக' குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

1-ம் எதிரி சார்பில் அட்வக்கேட் கே. வி. எஸ். சண்முகநாதன், புறக்டர் ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜராஞர். 2-ம் எதிரி சார்பில் அட்வக்கேட் எஸ். நாகராசா, புறக்டர் எஸ். தில்லையரின் அனுசரணையுடன் ஆஜராஞர். எதிரிகளுக்காக அரசாங்கத்தால் புறக்டர் கே. குணரத்தினம் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் அலோய் இரத்தினயக்கா ஆஜராஞர்.

டாக்டர் சண்முகநாதன் மேலும் சாட்சியமளிக்கையில் சின்னவன் நாகியையும் பரிசோதனை செய்ததாகவும் அவரது உடலில் 5 காயங்கள் காணப்பட்டதாகவும், முதலாவது காயம் அடியினுல் ஏற்பட்டதாகவும் கூறினர்,

மேல் விசாரணை இன்று காலை ஆரம்பமாகும்.

இந்திய, இலங்கை

# கடல் பிராந்திய எல்லை; மேனன் கூறும் யோசனை

கொழும்பு, வியாழன்

'இந்திய, இலங்கை கடல் பிராந்தியங்களை நிர்ணயிக்கும் விஷயத்தில் இருநாடுகளும் நேச உறவுடன பேசி ஒருமுடிவுக்கு வரலாம் என்று இந்திய முன்னுள் பாதுகாப்பு அமைச்சர் திரு. வி கிருஷ்ணமேனன் பத்திரிகை நிருபர்களிடம் இன்று கூறினர்.

திரு. கிருஷ்ண மேனன் மேலும் இது சம்பந்தமாகக் கூறுகையில் இப்போதிருக்கும் மாற்றங்களுக்கமைய கடல்பிராந்திய எல்லைகளை விஸ்தரிக்கவேண்டிய பொதுவான நிலை ஏற்பட்டிருப்பதாகவும் கடல் பிராந்திய எல்லைகளை இருநாடுகளும் நிர்ணயிக்கும் வேலையை ஒரு பெரியபிரச்னையாகக் கருதாமல் நட்புறவுடன் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டால் மிகவும் சுமுகமாக இதனை முடிவுசெய்து கொள்ளலாமென்ருர். இது ஒரு பெரிய பிரச்னையல்ல எனவும் அவர் எடுத்துக் கூறினர்.

# கொழும்புக்கு அதிக வெங்காயம் அனுப்பமுயற்சி

யாழ்ப்பாணம், வியா.

உணவு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி வடபகுதி கமத்தொழில் அபிவிருத்தி ஆணையாளருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் உடனடியாக யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகும் வெங்காயத்தை கூடுதலாக ரயில் பெட்டிகள்மூலம் கொழும்புக்கும்—இலங்கையின் பல பாகங்களுக்கும் அனுப்பிவைக்க கூட்டுறவு மொத்த இலாகாவை பணிக்கும்படி கோரியுள்ளார்.

வடபகுதி கூட்டுறவு உற்பத்தியாளர் சமாஜத்திலிருந்து கூட்டுறவு மொத்த இலாகா வெங்காயத்தை கொள்முதல் செய்வதைக் குறைத்தது காரணமாக உற்பத்தியாளருக்கு ஏற்பட்ட கஷ்டத்தைத் தவிர்க்க முடியாதுபோயிற்று. வடபகுதி கூட்டுறவு உற்பத்தியாளர்சமாசம் ஆட்சேபனை செய்ததன் காரணமாகவே இத்தகைய உத்தரவு அமைச்சிடமிருந்து கிடைக்கப்பெற்றதென அறியப்படுகிறது. [நி]

# மார்ட்டின் கமிஷன் அறிக்கை: செனட்டில் கேள்வியும் பதிலும்

கொழும்பு, புதன்

செனட்சபையில் இன்று வரவு - செலவுத் திட்டம் பரிசிலனைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. நீதிமந்திரி செனட்டர் பேர்லி விஜயமனே வரவு-செலவுத் திட்டத்தை தாக்கல் செய்தார். அதன் மீதான விவாதம் பின்னர் நடைபெறும்.

ஒத்திவைப்பு பிரேரணையின்போது எதிர்க்கட்சி செனட்சபை தலைவர் திரு. ஏ. பி. ஜயசூரியா யாழ்ப்பாண மாநகரசபை எல்லை நிர்ணயக்கமிஷன் அறிக்கை பற்றி வினவினர்.

முன்னுள் நீதிபதியான திரு. சி. எக்ஸ். மார்ட்டின் தலைமையில் நிறுவப்பட்ட கமிஷன் யாழ்ப்பாணம் நகரத்தின் எல்லைகள் பற்றி விரிவாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்திருந்ததாகவும், அந்த அறிக்கை மீது நடவடிக்கை எடுக்க தாம் மந்திரி பதவியில் இருந்தபோது உத்தரவிட்டிருந்ததாகவும், தெரிவித்த அவர் இப்பொழுது அந்த அறிக்கைமீது நடவடிக்கை எடுக்கப்படுமா? என்று உள்ளூராட்சி மந்திரியிடம் கேட்டார்.

உள்ளூராட்சி அமைச்சர் செனட்டர் திருச்செல்வம், இன்னும் 4 மாதங்களில் யாழ்ப்பாணம் மாநகரசபை தேர்தல் நடைபெறுமென்றும், அதற்கிடையில் மார்ட்டின் கமிஷன் அறிக்கைபற்றி ஆலோசித்து முடிவெடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். தற்பொழுது இந்த விஷயம் ஆலோசனையில் இருப்பதாகவும் மந்திரி தெரிவித்தார்.

# பெற்ருேருடன் சென்ருர்

மன்னர், வியா.

வவனியாவைச் சேர்ந்த 17 வயது யுவதியான குசுமாவதி, பெற்ருேருக்குத் தெரியாமல் பியதாஸா என்ற இளைஞனுடன் ஓடிச்சென்றதாக கடந்த மாதம் 23-ம் திகதி பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு மன்னர் பொலிஸ் கோர்ட்டில் மறுவிசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணையின்பின் குசுமாவதி தனது பெற்ருேருடன் செல்லச் சம்மதித்தார். வழக்கை விசாரணைசெய்த மன்னர்ப் பிரதம நீதிபதி திரு. பரமகுரு, பியதாசாவை எச்சரித்து விடுதலை செய்தார்.

கடைத்திருட்டுகளை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நடாத்தவிருக்கின்ருர்.

ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் உட்பட 10 பேர் இந்தத்திட்டத்தில் பட்டின இரவுக் காவலாளர்களாக நியமிக்கப்படுவார்கள். மாலை 7 மணியிலிருந்து காலை 6 மணிவரை இருவராக இக்காவலாளர்கள் நகரின் சகல வீதிகளிலும் ரோந்துசுற்றுவார்கள். பொலிஸார் இவர்களுக்கு உதவியாகவிருப்பார்கள். சகல கடைக்காரர்களிடமிருந்தும் மாதாந்தம் நன்கொடையாகப் பணம் பெற்று இக்காவலாளர்களுக்கு சம்பளம் வழங்க ஆலோசிக்கப்படுகிறது.

இத்திட்டம் நடைமுறைக்கு வருவதன்மூலம் இங்கு நிலவும் களவுகள் ஒழிக்கப்படும் என பொலிஸார் எதிர்பார்க்கின்றனர். [ந நி.]

# கவர்னர் ஜெனரலுடன் பிரதமர்

கொழும்பு, புதன்

பிரதமமந்திரி திரு. டட்லிசேனநாயகா இன்று கவர்னர்ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லாவாவைச் சந்தித்துப் பேசினர்.

பெல்மதுலை உபதேர்தலில் போட்டியிடும் திருமதி சீதா செனிவரத்னவின் கணவரான திரு. ஏ. ஜி. டி. எஸ். செனிவரத்ன தொடர்ந்து அரசாங்க சேவைக்கமிஷன் தலைவராக இருந்துவருவது உசிதமா என்பது பற்றி அவர் கவர்ணஜெனரலுடன் ஆலோசித்திருக்கலாம் என்று ஊர்ஜிதமற்ற ஒரு செய்தி கூறுகின்றது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 51-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org